புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 32. TML1171 - பாரதிதாசனின் பெண்ணியம் – குடும்ப விளக்கு

முனைவர் அ.குருமூர்த்தி
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்
ஸ்ரீ வாசவி கல்லூரி (சுயநிதிப்பிரிவு), ஈரோடு – 638316

## முன்னுரை

*பெண்ணியம் என்பது சமூக கலாசார வளர்ச்சியில் எழுந்த பெண்மை பற்றிய சமுதாய விழிப்புணர்வு. இந்த உணர்வு ஏதோ, தற்காலத்தில் தோன்றியது இல்லை. மனிதன் காட்டு மிராண்டிகளாகச் சுற்றிக் கொண்டு இருந்த காலம் முதலாக இருந்து உள்ளது. குறிப்பாக, தமிழ்ச் சமூகத்தில் பெண்தான் குழுவை நடத்துகின்ற வல்லமை உள்ளவளாக இருந்துள்ளாள். அதனால் தான், தமிழ்ச் சமுதாயத்தை தாய் வழிச் சமூகம் என்று அழைக்கின்றனர். பின்னர், வந்த ஆரிய கலப்பினால் அது, தந்தை வழி சமூகமாக மற்ற முற்பட்டது. அவற்றில், சில மாறுதல்களை ஏற்றுக் கொள்ளவும் செய்து உள்ளனர். குறிப்பாக, மகன், மகள் பிறப்பிற்குப் பிறகு, அவர்களின் பெயரின் முன் எழுத்தாக, தந்தை பெயரின் முதல் எழுத்தாகப் போடும் வழக்கத்தினை ஏற்படுத்தி உள்ளனர். இது, ஒரு பெண்ணின் சுயஒழுக்கத்தைக் கேலி செய்வதாகவே உருவாக்கப்பட்டுள்ளது. இச்சமூகத்தில் “ஒருவனுக்கு ஒருத்தி” என்பது சொல் வழக்கில் தான் உள்ளதே தவிர, நடைமுறையில் இருப்பது இல்லை. பெண் இறந்து விட்டாள், ஆண் விரைவில் மறுமணம் புரிந்துக் கொள்ளலாம், ஆனால் இந்த நீதி பெண்ணுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இதனை பெரியார், ”ஆண்களுக்கு இல்லாத விதவைத் தன்மை பெண்களுக்கு மட்டும் ஏனிருக்க வேண்டும்? பெண்கள் தங்கள் கணவன் இறந்தால் அந்தப் பெண்கள் சாகின்றவ விதவையாகத்தானிருந்து தீர வேண்டும்” (ப.42, பெரியார் களஞ் சியம், தொகுதி–24) என்று உரைக்கிறார். பெண்கள் விடுதலை பெற வேண்டும் . மனிதன் முட்டாள் தனம், மூடநம்பிக்கை, மடமை நீங்கி அறிவு பெற வேண்டும். அதற்குப் பெண்கள் கல்வி கற்க வேண்டும். இதனையே தான் பாரதிதாசனும் வழியுறுத்துகிறார். தம் கதையின் பெண் பாத்திரங்கள் அறிவு மிகுந்தவர்களாகவும் அதோடு வாழ்வினை வழி நடத்துபவர்களாகவும் படைக்கின்றார்.*

## பாரதிதாசனின் பெண்ணுலகம்

*பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுத்த நூற்றாண்டு 20–ஆம் நூற்றாண்டு. இதற்கு முன்பு இல்லையா என்றால், இருந்துள்ளது. ஆனால், இடைக்காலத்தில் அம்மதிப்பானது குறைந்துள்ளது. மேலை நாடுகளில் கி.பி.12–ஆம் நூற்றாண்டு முதல் பெண்ணுரிமை குரல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. வீரியம் கொண்டு எழுந்தது, கி.பி.18–ஆம் நூற்றாண்டு பிரான்சில், பிரிட்டனிலும் பெண்கள் உரிமைகள் மற்றும் சமுதாயச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டதின் விளைவு, உலக முழுவதிலும் பெண்ணரிமைப் பேசப்பட்டது. இக்காலக் கட்டத்தில் மூன்று முக்கியக் கருத்துருவாக்கம் பெண்கள் உருவாக்கினார்கள்.*

1. கல்விச் சுதந்திரம் (Education)
2. கருத்துச் சுதந்திரம் (Emotion)
3. பொருளாதாரச் சுதந்திரம் (Economy)

*மேற்கண்ட வழிமுறைகளைத் தான் பெரியாரும் தன் கட்டுரைகளின் வாயிலாகவும், பேச்சின் வாயிலாகவும் வலியுறுத்தினார். அவரை பின் தொடர்ந்து பாரதிதாசனும் தம் படைப்புகளில் படைத்தளித்தார்.*

*குடும்ப விளக்கில் வரும் தலைவி, காலை எழுந்ததும் யாழிசைத்து தன் குடும்பத்தாரை எழுப்புகின்றாள். பெண் இசையின் வடிவம், இசை கற்றுக் கொண்ட பெண்ணாகப் படைக்கிறார்.*

''யாழின் உரையினை எடுத்தாள்; இசையால்
வாழிய வையம் வாழிய என்று
பாவலர் தமிழின் பழச்சுவை சேர்த்தாள்,
தீங்கிலாத் தமிழில் தேனிசைக் கலவை போய்த்
தூங்கிய பிள்ளைகள், தூங்கிய கணவனின்
காதின் வழியே கருத்தில் கலக்கவே,
மாதின் எதிர் அவர் வந்துட் கார்ந்தனர்'' (குடும்ப விளக்கு , ப.2)

*பெண் என்றாலே காலை முதல் இரவு வரை சமையல் அறையில் இருக்கும் ஒரு பொருளாக இல்லாமல் பல திறனைகளை வளர்த்துக் கொண்டே வித்தகராக திகழ வேண்டுபவள் என்பதனைத் தொடக்கத்திலே பாரதிதாசன் விளக்குகிறார்.*

**பெண் – பல்கலைக்கழகம்**

*குடும்ப விளக்கில் பெண் என்பவள் பல்கலைக்கழகமாகத் திகழ்பவள். கல்வி அறிவுடைய பெண்ணாக படைத்துள்ளார். பிள்ளைகளுக்குப் பள்ளியில் கற்றுத் தரும் பாடத்தோடு வீட்டில் கற்றுக் கொடுக்கிறாள்.*

''பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்
அவள்வாத் திச்சி; அறைவீடு கழகம்;
தவழ்ந்து சங்கத் தமிழ்ச்சுவை; அள்ளி
விழுங்கினார் பிள்ளைகள்;'' (கு.வி–ப.3)

*கல்விக் கூடங்களில் கற்கும் கல்வியினை மனையில் மீண்டும் ஒருமுறை வாசிக்கும் போதும் சரி, கேட்கும் போதும் சரி, ஆழ் மனதில் உள்ளே பதியும், கல்வி தான் ஆகச்சிறந்த ஆயுதம் என்பதனால் தாய், தன் பிள்ளைகளுக்குக் கல்வியினைப் போதிக்கின்றாள்.*

*வீட்டு உள்ள மரச்சாமான் போன்ற பழுது பார்க்கும், திறன் உடையவளாக திகழ்கிறாள். ஏனெனில் எப்பணி என்றாலும் ஆணைச் சார்ந்தே இருக்கும் காலத்தில் எப்பணியாலும் தானே செய்யவல்ல பெண்ணாகப் படைத்துள்ளார்.*

''....முன்உள்ள மரச்சா மான்கள்
    இழந்தவை, பழுது பார்த்தாள்
உளியினால் சீவிப் பூசிப்
    படிந்துள்ள அழுக்கு நீக்கிப்
பளபளப் பாக்கி வைத்தாள்;
    இடிந்துள்ள சுவர் எடுத்தாள்;
சுண்ணாம்பால் போரை பார்த்தாள்'' (கு.வி, ப–6)

*மரவேலை, கட்டிட வேலை என்பது கடினமான பணி, ஆனால் தான் செய்ய முடியும் என்பதனை உடைத்து எறிகின்றாள் தலைவி.*

**பெண் – மருத்துவர்**

*பெண் மருத்துவம் கற்றாமலே, அவள் மருத்துவம் பார்ப்பாள், பாட்டி வைத்தியம் என்பர். வழிவழியாக வரக்கூடிய மருத்துவ முறையினைப் பெண் இயல்பாகவே கற்றுக் கொள்வாள். கற்றுக் கொள்ளும் திறன் இயற்கையாகவே பெண்ணுக்கு அதிகம்.*

''நாடியில் காய்ச்சல் என்றே
    நன்மருந் துள்ளும் கீந்தாள்;
ஒடிநற் பாலை மொண்டு;
    மறுவுலைக் கஞ்சி ஊற்றி;
வாடிய கிழவர்க் கீந்தாள்;
    மாமிக்கோ தலைநோக் காடாம்;
ஓடிடச் செய்தாள் மங்கை
    ஒரேபற்றில் நொடிநே ரத்தில்'' (ப.11)

*முதியவர்களுக்கு அடிக்கடி ஏற்படும் உடல் நோய்களைக் கண்டறிந்து அதற்குரிய மருந்தினை, தன் வீட்டில் உள்ள பொருட்களைக் கொண்டு சரி செய்துக் கொள்ளும் அறிவு பெண்ணுக்கு உள்ளது என்பதனை அறிய முடியும்.*

**வாணிகத்திறன்**

*வாணிகம் செய்வது ஆணுக்குரியது என்று பழங்காலமாக கூறிக் கொண்டு உள்ளனர். "திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது முதுமொழி, பொருள் தேடி செல்லும் போது, பெண்ணை அழைத்துச் செல்வது இல்லை. சங்க காலம் முதலாக அதனைக் காணலாம். தலைவன் பொருள் ஈட்ட செல்வதற்கு, பிரிவு ஏற்படுவதைக் கண்டு வருத்தம் அடைவதாகவும், அதேபோல், தலைவியும் வருத்தம் அடைவதாகவும் பல பாடல்கள் பாடியிருப்பதைக் காண முடிகின்றன.*

*நெய்தல் நிலத்தில் மட்டும் மீனின் வருகைக்குப் பின், மகளிர் விற்பனை செய்வதைக் காணமுடிகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம் போன்ற நிலங்களில் இவற்றைக் காண்பது அரிது. வாணிகம் பெண்ணுக்குரியது அல்ல என்பது பொதுச் சிந்தனை. இதனை பாரதிதாசன் உடைத்துள்ளார்.*

''களிப்பாக்குக் கேட்பார்க் கீந்து
களிப்பாக்கிக் கடனாய்த் தந்த
புளிப்பாக்கி தீர்ந்த பின்பு
கடனாகப் புதுச்ச ரக்கை
அளிப்பார்க்குப் பணம்அ ளித்தாள்;

..................

இளகிய நெஞ்சத் தாளை
இளகாத வெல்லம் கேட்பார்;
அளவாக இலாபம் ஏற்றி
அடக்கத்தை எடுத்து ரைப்பாள்!
மிளகுக்கு விலையும் கூறி
மேன்மையும் கூறிச் சற்றும்
புளுகாமல் புகன்ற வண்ணம்
புடைத்துத்தூற் றிக்கொ டுப்பாள்'' (ப.15)

*வாணிகத்தில் மட்டுமல்ல, கணக்கு பார்ப்பவதிலும் திறமை உடையவர்கள் பெண்கள் என்பதைக் கட்டமைக்கிறார். பாரதிதாசன்,*

''ஞ்ஞ்ஞ்ஞ்ஞ்ஞ்.அத்தான்
கண்டுள்ள கணக்கின் வண்ணம்
சரக்குகள் கடன்தந் தார்க்குத்
தண்டலும் கொடுத்தேன்; விற்று
முதலினைத் தனியே வைத்தேன்;'' (ப.180

*என்று அனைத்து கணக்குகளையும் கணவனிடம் கொடுத்து விட்டு, வீட்டிற்குச் செல்கிறாள். கல்வி யினால் பயன் இல்லை என்று கூறுபவர்கள் இருக்கும் காலக்கட்டத்தில் இத்தகைய புரட்சி கதையினை எழுதியுள்ளார்.*

**பொதுத் தொண்டு**

*சமூக வளர்ச்சியில் பெண்கள் முதன்மையுடையவர்கள். ஆண்கள் மட்டுமே போராட்டங்களை நடத்துவதில் எந்தவொரு வெற்றியும் பெறுவதில்லை. ஆனால், ஒரு போராட்டத்தில் பெண்கள் ஈடுபட்டால் அது வெற்றி பெறுவது உறுதி. இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, பெண்கள் மீண்டும் சமையல் அறையில், தள்ளப்பட்டனர். 1960–களில் பெண்கள் பொது வாழ்வில் சில பிரச்சனைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டிய சூழல் உருவாயிற்று. தொழிற்சாலையில் பணிபுரிவர்கள், விவசாயிகள், பழங்குடி மக்கள் இவர்களின் போராட்டங்களில் பெண்கள் பங்கு கொண்டனர். 1975–ஆம் ஆண்டு உலகப் பெண்கள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டு, அதன்பின் உள்ள பத்தாண்டுகள் பெண்கள் ஆண்டாக அறிவிக்கப்பட்டது. தற்காலத்தில் 2025 – ஆம் ஆண்டும் பெண்கள் ஆண்டாக கொண்டாடப்படுகிறது.*

*குடும்ப விளக்கில் தலைவி தன் கணவனிடம் கூறுவதாக அமையும். வீட்டிற்கு செய்யும் பணிகள் ஒருபுறம் இருக்க, நாட்டிற்கு என்ன தொண்டு செய்தோம் என்று வினவுகிறாள். பெண் வீட்டை மட்டுமல்ல நாட்டையும் பேணிகாப்பவளாக இருக்கிறாள்.*

''அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்
இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்ன செய்தோம்;
என்பதைநாம் நினைத்துப்பார்ப் பதுவு மில்லை'' (ப.20)

*ஆண்களுக்கு ஆலோசனை கூறக்கூடிய அமைச்சனாக பெண் இக்கதையில் கட்டமைக்கப்படுகிறாள்.*

**நிறைவாக**

*பாரதிதாசனின் பாடல்கள், காவியங்கள் எல்லாவற்றுள்ளும், அவர் உள்ளம் உணர்ச்சி அனைத்திலும் கூட ஆழ்ந்து பார்த்தோம். தமிழ்நாட்டின் வாழ்வில் அணு அணுவாய்க் கலந்து அகங்கரைந்து பாடியுள்ளார். சொல்லின் பொருளின் சுவை கனிந்து நிற்கின்றன கவிகள். கவிஞரின் குடும்ப விளக்கினை வாசிக்க வாசிக்க அவரின் புலமை உணர முடிகிறது. அதோடு, பெரியாரின் கொள்கையை ஏற்ற பின்பு, பெண்ணுரிமையை அவர் பல கவிகளில் வரைந்துள்ளார். குடும்ப விளக்கு மட்டுமல்ல, சஞ்சீவி பர்வத்தின் சாரல், புரட்சிக்கவி, படித்த பெண்கள் என அவரின் படைப்புகளில் பெண்ணியத்தையும் பெண் உரிமைகளையும் பெண் கல்வியையும் வழியுறுத்தியும் பேசியுள்ளார்.*

**துணைநூற் பட்டியல்**


1. பாரதிதாசன், குடும்ப விளக்கு, மணிவாசகர் பதிப்பகம், 1993
2. பெரியாரின் களஞ்சியம், (தொகுதி–22), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 2007
3. பெரியாரின் களஞ்சியம், (தொகுதி–23), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 2007
4. பெரியாரின் களஞ்சியம், (தொகுதி–24), பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 2007
5. முத்துச்சிதம்பரம்.ச, பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ழிசிஙிபி, சென்னை, 2017
6. கோவிந்தசாமி.மு, ஞிக்ஷீ, பாரதிதாசன் கவித்திறன், பாரிநிலையம், சென்னை, 1957.